


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 03 | Issue: 165 | 4 Pages | 13.01.2026 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 03 | இதழ்: 165 | 4 பக்கங்கள் | 13.01.2026 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி யிடத்தாற் செயின்**

**விளக்கம்:** (செய்யும் வழிவகைகமைக்) குறைவில்லாமல் எண்ணித் தக்க இடத்தில் பொருந்திச் செய்தால், அஞ்சாமை அல்லாமல் வேறு துணை வேண்டியதில்லை.

## காசாவில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் 5 குழந்தைகள் உள்பட 14 பேர் உயிரிழப்பு



காசா, ஜன.13

காசாவில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இடையே 2 ஆண்டுகளாக நடந்து வந்த போரால் இதுவரை 71 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் 1 லட்சத்து 71 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். அதே சமயம், காசாவில் ஆயிரக்கணக்கான மக்கள் உணவு, இருப்பிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இல்லாமல் திண்டாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் போர்நிறுத்தம் கொண்டு வருவது தொடர்பான சர்வதேச சமூகத்தின் அழுத்தத்திற்கு நடுவே, அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் 20 அம்ச திட்டத்தை ஏற்று, இஸ்ரேல்ஹமாஸ் தரப்பினர் காசாவில் போர் நிறுத்தம் செய்ய ஒப்புக்கொண்டன. பின்னர் டிரம்ப் தலைமையில் எகிப்தில் நடந்த அமைதி மாநாட்டில் முதற்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தமும் கையெழுத்தானது.

இருப்பினும் காசாவில் பாலஸ்தீன மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளில், இஸ்ரேல் ராணுவம் அவ்வப்போது குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கி சூடு தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்த நிலையில், காசாவில் இஸ்ரேல் ராணுவம் மீண்டும் குண்டுவீசி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் 5 குழந்தைகள் உள்பட 14 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் கட்டிட இடிபாடுகளுக்கு இடையில் சிக்கி 17 பேர் படுகாயமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## இஷின்ரியு கராத்தே பள்ளிகளை ஒருங்கிணைக்கும் தேசிய– சர்வதேச முயற்சி



யுனைடெட் இஸ்சின்ரியு கராத்தேடூ பெடரேஷன், இந்தியா சார்பில், நாடு தழுவிய மற்றும் உலகளாவிய அளவில் இஷின்ரியு கராத்தே பள்ளிகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றோம்.

புலன் உணர்வு வளர்ச்சி, உடல்–மன ஒழுக்கம், தற்காப்பு திறன் மேம்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை ஒன்றிணைக்கும் இந்த அமைப்பு, இஷின்ரியு கராத்தே கலையை உலகளவில் பரப்பும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றோம்.

இந்த அமைப்பின் நிறுவனர் இணைக்கப்பட்ட இஷின்ரியு கராத்தேடுவின் மூத்த குருவும், இந்திய ஸ்டைல் தலைவருமான கியோஷி டாக்டர் ஜே.பி. சிவபாலன், எம்.ஏ., அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் பெடரேஷன் செயல்பட்டு வருகிறது.

மேலும், இந்திய இயக்குநர் ஆலோசனைக் குழுவில் எம்.ஆர்.கே. சாந்த குமார், வீரகலை இதழ் சார்பில் உறுப்பினராக செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இந்த முயற்சியின்மூலம் இளம்தலைமுறையினரிடம் வீரகலை கலாசாரம் வளர்க்கப்பட்டு, தேசிய மற்றும் சர்வதேச அளவில் இந்தியாவின் இஷின்ரியு கராத்தே திறமைகள் முன்னெடுக்கப்படும் என பெடரேஷன் இந்திய ஸ்டைல் தலைவருமான கியோஷி டாக்டர் ஜே. பி. சிவபாலன், எம்.ஏ. தெரிவித்தார்.

## கம்பம் அருகே பட்டப் பகலில் இளைஞர் வெட்டிக்கொலை



தேனி:கம்பம் அருகே இராயப்பன்பட்டி காவல் சரகத்திற்கு உட்பட்ட கருநாக்கமுத்தன்பட்டி மாரியம்மன் கோவில் தெருவில், பட்டப் பகலில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பைஏற்படுத்தியுள்ளது. தகவலறிந்துசம்பவ இடத்திற்குவிரைந்த இராயப்பன்பட்டி ாவல்துறையினர், உடலை மீட்டு உடற்கூறு ஆய்வுக்காக அரசு ருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த கொலை சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து, குற்றவாளிகளை கைது செய்ய தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# சாலையில் கிடந்த 45 சவரன் தங்க நகையை போலீசில் ஒப்படைத்த தூய்மைப்பணியாளருக்கு ரூ. 1 லட்சம் பரிசுத்தொகை; மு.க.ஸ்டாலின் வழங்கினார்




சென்னை ஜன.13

சென்னை தியாகராய நகர் முப்பாத்தம்மன் கோவில் தெரு, வண்டிக்காரன் சாலையில் நேற்று சென்னை மாநகராட்சி பெண் தூய்மைப்பணியாளர் பத்மா என்பவர் குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

அப்போது, அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பிளாஸ்டிக் கவர் ஒன்று சுற்றி வைக்கப்பட்டிருப்பதை கண்டார். அதை பிரித்து பார்த்தபோது அதில் தங்க நகைகள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக அவர் பாண்டி பஜார் போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தார்.

போலீசார் பிளாஸ்டிக் கவரை பிரித்து நகைகளை சோதனை செய்தபோது அவை சுமார் ரூ.45 லட்சம் மதிப்புள்ள 45 சவரன் தங்க நகைகள் என்பது தெரியவந்தது. இதையடுத்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அப்போது, நங்கநல்லூர் பகுதியைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் ஏற்கனவே பாண்டிபஜார் போலீஸ் நிலையத்தில் சுமார் 45 சவரன் நகையை தொலைத்து விட்டதாக புகார் அளித்து சென்றது தெரியவந்தது.

பின்னர், புகார்தாரரான ரமேசை போலீஸ் நிலையம் வரவழைத்து விசாரணை மேற்கொண்டனர். அப்போது, பத்மா போலீசாரிடம் ஒப்படைத்தது ரமேசுக்கு சொந்தமானது என்பது தெரியவந்தது. இதையடுத்து, 45 சவரன் நகையை போலீசார் ரமேசுடம் ஒப்படைத்தனர். மேலும், ரூ.45 லட்சம் மதிப்புள்ள 45 சவரன் தங்க நகையை கண்டெடுத்து, அதனை நேர்மையாக போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்த தூய்மை பணியாளர் பத்மாவை போலீசார் வெகுவாக பாராட்டினர்.

இந்நிலையில், சாலையில் கிடந்த 45 சவரன் தங்க நகையை போலீசில் ஒப்படைந்து பிறருக்கு முன்னுதாரணமாக தகிழ்ந்த பத்மாவை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டினார். தூய்மைப்பணியாளர் பத்மாவை இன்று தலைமை செயலகத்திற்கு நேரில் அழைத்த முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். மேலும், பத்மாவுக்கு பரிசுத்தொகையாக ரூ. 1 லட்சத்திற்கான காசோலையை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

## ஆம்புலன்ஸ்க்கு வழி கிடைக்காத ஒரே இடம் இரயில்வே கேட் ஆம்புலன்ஸ் டிரைவரின் ஆதங்கமும், கோரிக்கையும்




அவசர ஆம்புலன்ஸ்க்கு வழி கிடைக்காத ஒரே இடமாக இரயில்வே கேட் உள்ளது. எனவே இரயில் சென்றவுடனேயே சிவப்பு விளக்கு சிக்னல் நிற்கும் வரை காத்திருக்காமல் உடனடியாக கேட் திறக்க இரயில்வே நிர்வாகமும், மத்திய அரசும் உடனடி நடவடிக்கை எடுக்க கோரிக்கை எழுந்துள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்டம் அம்மாபட்டினம் முன்னாள் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் கட்டுமாவடி ராஜா கூறியதாவது:

கடந்த சில நாட்களுக்கு முன்பு தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி அருகே உயிருக்கு போராடிய பெண்மணியை இருசக்கர வாகனத்தில் அழைத்து வரும்பொழுது இராமேஸ்வரம் தாம்பரம் விரைவு இரயிலுக்காக கேட் பூட்டப்பட்டிருந்தது. கேட்டை திறக்க சொல்லி உயிருக்கு போராடிய பெண்ணின் உறவினர்கள் சண்டையிட்டும், மிரட்டியும் உள்ளனர். இறுதியாக கேட்கீப்பர் தன்னுடைய டூவீலரை கொடுத்து உதவி செய்து அவர்களை சமாளித்துள்ளார். இது போன்ற சம்பவங்கள் ஆங்காங்கே அடிக்கடி நடந்து வருகிறது. குறிப்பாக அவசரமாக ஆம்புலன்ஸ் வரும்பொழுது கேட் திறக்கப்படாததால் மிகப்பெரிய அளவில் வாக்குவாதமும், சண்டையும் நடைபெறுவது வாடிக்கையாக இருக்கிறது.

"கடந்த ஆண்டு 2025ல் அம்மாபட்டினத்தில் நான் ஆம்புலன்ஸ் ஓட்டும் பொழுது இது போன்ற சம்பவங்கள் நிறைய நடந்துள்ளது.

அவசர நோயாளிகளை ஆம்புலன்சில் நான் அழைத்துச்செல்லும் பொழுது புதுக்கோட்டை செல்லும் வழியில் அறந்தாங்கியில் கட்டுமாவடி சாலையில் உள்ள இரயில்வே கேட்டிலும், திருச்சி செல்லும் பொழுது புதுக்கோட்டை நகரின் திருச்சி பைபாஸ் அருகே கருவேப்பிலான் இரயில்வே கேட்டிலும், காரைக்குடி நகரில் அழகப்பா கல்லூரி அருகில் உள்ள இரயில்வே கேட்டிலும், மயிலாடுதுறை செல்லும் வழியில் நீடாமங்கலம் இரயில்வே கேட்டிலும் சிக்கிக் கொண்டோம். இரயில்வே கேட்டில் ஆம்புலன்ஸ் நிறுத்தப்பட்டதும் ஆம்புலன்சில் உள்ள நோயாளியின் நிலைமையை பார்த்த அருகில் இருந்த வாகன ஓட்டிகள் இரயில்வே கேட் கீப்பரிடம் கடுமையான வாக்குவாதத்திலும், சண்டையிலும் ஈடுபட்டனர். உடனே ஒரு சில கேட் கீப்பர்கள் என்னிடம் சில நிமிடங்கள் மட்டும் காத்திருங்கள். விரைவில் இரயில் வந்துவிடும். சிவப்பு விளக்கு சிக்னல் நின்றவுடன் உடனே சென்று விடலாம் என்று கெஞ்சினார்கள். நானும் உடனே கேட்கீப்பரிடம் சண்டையிட்ட அருகில் இருந்த வாகன ஓட்டிகளிடம் சமாதானம் செய்து, நோயாளியின் உறவினர்களிடமும் இரயில் சென்ற பிறகுதான் செல்லலாம் என்று புரிய வைத்தேன். இருப்பினும் இரயில் சென்ற இரண்டு அல்லது மூன்று நிமிடம் கழித்து தான் கேட் திறக்க முடிகிறது. இரயில் சென்ற பிறகு சிவப்பு விளக்கு சிக்னல்கள் நிற்பதற்கு இரண்டு நிமிடமாகிறது. அதற்குப் பிறகு தான் இரயில்வே கேட் திறக்க முடிகிறது. இந்த காலதாமதத்திற்கும் வாகன ஓட்டிகள், கேட் கீப்பரிடம் கடுமையாக சண்டை சச்சரவு செய்கிறார்கள். இது போன்ற சூழலில் கேட் கீப்பர்கள் செய்வதறியாது தவிக்கிறார்கள். எவ்வளவுதான் அறிவியல் வளர்ச்சி அடைந்தாலும் இரயில் சென்ற பிறகும் கேட் திறக்க மூன்று நிமிடம் தாமதம் ஆகிறது. ஆனால் கிராமப்புறங்களில் உள்ள இரயில்வே கேட்டுக்களில் இரயில் சென்ற உடனே திறந்து விடுகிறார்கள். அங்கு சிவப்பு விளக்கு சிக்னல் நிற்கும் வரை காத்திருப்பது இல்லை. நகர்ப்புற பகுதிகளில் மட்டுமே இந்த சிவப்பு விளக்கு சிக்னல் நிற்கும் வரை காத்திருக்கும் நிலைமை ஏற்படுகிறது. எனவே மத்திய அரசும், இரயில்வே நிர்வாகமும் இதில் தலையிட்டு இரயில் சென்ற உடனேயே கேட் திறக்க கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் உயிர் காக்கும் ஆம்புலன்ஸ் செல்ல வழி கிடைக்கும். டிராபிக் சிக்னல்கள், சுங்கச்சாவடி (டோல் கேட்), பொதுக்கூட்டங்கள், மறியல் போராட்டங்கள், ஊர்வலங்கள், ஆன்மீக விழாக்கள் இன்னும் பல போக்குவரத்துக்கள் செல்ல முடியாத இடங்களில் கூட ஆம்புலன்ஸுக்கு உடனடியாக வழி கிடைக்கிறது. ஆம்புலன்ஸ்க்கு வழி விடாத ஒரே இடம் இரயில்வே கேட் மட்டுமே.

திருச்சியில் உள்ள எத்தனையோ டிராபிக் சிக்னல்களில் ஆம்புலன்ஸ் சத்தம் கேட்ட உடனேயே அங்குள்ள டிராபிக் போலீசார் ஒலிபெருக்கியில்ஆம்புலன்ஸ்வருகிறதுவழிவிடுங்கள் என்று கூறி ஒரு நொடி கூட தாமதிக்காமல் உடனடியாக ஆம்புலன்ஸ் கடந்து செல்ல வழி ஏற்படுத்துகிறார்கள். ஆனால் அவசர ஆம்புலன்ஸ்க்கு வழி விடாத ஒரே இடம் இரயில்வே கேட் மட்டுமே. எனவே மத்திய அரசும், இரயில்வே நிர்வாகமும் உடனடியாக இதில் தலையிட்டு இரயில் சென்ற உடனேயே கேட் திறக்க கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் கேட் கீப்பராக பணிபுரியக்கூடியவர்களுக்கும் மன நிம்மதியை ஏற்படுத்தும்" என்று கூறினார்.

## சென்னைமாமல்லபுரம் இ.சி.ஆரில் "டிரையத்லான்" போட்டி துணை முதல்வர் துவக்கி வைத்தார்




சென்னையில் முதல் முறையாக, 1.5கி.மீ.,நீச்சல்,40கி.மீ.,சைக்கிள், 10 கி.மீ., ஓட்டம் என மாபெரும் 5150 “டிரையத்லான் சென்னை 2026” போட்டி நடைபெற்று வருகிறது. இதன் தொடர் போட்டியான ஓட்டம் போட்டியை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னை மாமல்லபுரம் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள எம்.ஜி.எம். பீச் ரிசார்ட்டில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் குறு,சிறுமற்றும்நடுத்தரதொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், செங்கல்பட்டு எம்.எல்.ஏ வரலட்சுமி மதுசூதனன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்செயலர் மேகநாதரெட்டி, செங்கல்பட்டு மாவட்டகலெக்டர் சினேகா, திருப்போரூர் ஒன்றிய குழு தலைவர் இதயவர்மன் உட்பட போட்டியின் நிர்வாகிகள்மற்றும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்றனர்.



# தூய்மைப் பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கு சமத்துவப் பொங்கல் பரிசுத் தொகுப்பு: அமைச்சர் சேகர்பாபு வழங்கினார்

சென்னை, ஜன.13

திரு.வி.க.நகர் மண்டலம் வார்டு74க்குட்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட 550 நபர்களுக்கு அமைச்சர் சேகர்பாபு சமத்துவப் பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:



முதல்அமைச்சரின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், சோமசுந்தரம் லைன் பகுதியில் இன்று (12.01.2026) நடைபெற்ற நிகழ்ச்சியில் வார்டு74க்குட்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு சமத்துவப் பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கினார்.

முதல்அமைச்சர் தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் 2026 திருநாளை தமிழக மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு மற்றும் ரொக்கப் பரிசாக ரூ.3,000 வழங்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தூய்மைப் பணியாளர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள நபர்களுக்கு முதல் அமைச்சருடைய அறிவுறுத்தலுக்கிணங்க பல்வேறு நலத்திட்ட உதவிகளும் பொங்கல் பரிசுத் தொகுப்புகளும் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இன்று திரு. வி.க.நகர் மண்டலம் வார்டு 74க்குட்பட்ட சோமசுந்தரம் லைன் பகுதியில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது.

இந்த விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், அனைத்து சமூக மக்கள் வைத்து கொண்டாடிய சமத்துவ பொங்கல் விழாவில் பங்கேற்றார். மாட்டுப் பொங்கலை சிறப்பித்திடும் வகையில் பசு மாடு மற்றும்கன்றுகளுக்குஇனிப்பு கரும்புமற்றும்பழங்களை வழங்கினார். பொங்கல் திருநாளில் முக்கிய விளையாட்டான உறியடி விளையாட்டினை மேயர் பிரியா உறியடித்து தொடங்கி வைத்தார்.

பின்னர், வார்டு74க்குட்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட மொத்தம் 550 நபர்களுக்கு வேட்டி, சேலை, பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், பாசிப்பருப்பு மற்றும் நெய் உள்ளடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வண்டியினை வழங்கி, அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்களை அமைச்சர் தெரிவித்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேனி: காவல் துறை போக்குவரத்து மாற்றம் அறிவிப்பு

தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் B. சினேகப்பிரியா,இ.கா.ப., அவர்களின் உத்தரவின்பேரில், 183வது தேசிய நெடுஞ்சாலையில் கூடலூர் மற்றும் குமுளி வழியாக செல்லும் வாகனங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளைதவிர்க்கும் நோக்கில், தற்காலிக போக்குவரத்து மாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 14.01.2026 மாலை 05.00 மணிமுதல் 15.01.2026 காலை 08.00 மணிவரை, கேரளாவிற்கு செல்லும் அனைத்து வாகனங்களும் கம்பம் புறவழிச்சாலை – கம்பம் மெட்டு பெரிய மாவட்ட சாலை (Major District Road) வழியாக செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது அனைத்து வாகன ஓட்டுனர்களும்




காவல் துறைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, விபத்தில்லா மற்றும் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ள ப்பட்டுள்ளது.

# உறவுகளின் உன்னத சங்கமம் TYSDS நடத்திய பிரம்மாண்ட பாரம்பரிய பொங்கல் விழா!"

திருவண்ணாமலை:

திருவண்ணாமலை இளைஞர் திறன் மேம்பாட்டுச் சங்கம் (TYSDS) சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்படும் பொங்கல் திருவிழா இந்த ஆண்டு "Family Pongal Sangamam – 2026" என்ற தலைப்பில், திருவண்ணாமலையில் உள்ள "பத்தாயம்" என்ற இடத்தில் மிக எழுச்சியுடன்நடைபெற்றது. இதில் 95க்கும் மேற்பட்ட சங்க உறுப்பினர்கள் தங்களது குடும்பத்தினருடன் கலந்து கொண்டு ஒற்றுமை மற்றும் பாரம்பரியத்தின்முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.



விழாவின் தொடக்கமாககாலை08:30மணிக்கு வருகை தந்த உறுப்பினர்கள் மற்றும் குடும்பத்தினரை

வரவேற்புக்குழுத்தலைவர் அலை தனசேகரன் – கவிதா தம்பதியினர் பாரம்பரிய முறையில் மாலை அணிவித்து வரவேற்றனர். தொடர்ந்து பொங்கல் ஏற்பாட்டு குழுத் தலைவர் அலை V. வெங்கடேசன் தலைமையில் கரும்புத் தோரணங்கள் கட்டப்பட்டு, மங்கல இசை முழங்க பாரம்பரிய முறையில் பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு நடைபெற்றது. "பொங்கலோ பொங்கல்" என்ற கோஷம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை முழங்க, விழா உற்சாகமாகத் தொடங்கியது.

இந்த விழாவில் பன்னாட்டு அலையன்ஸ் சங்கத்தின் மாவட்டத் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். PSLF LMF அலை V. பச்சையப்பன் (SVDG(E)) அனைவருக்கும் இனிப்புப் பெட்டகங்களை வழங்கி வாழ்த்தினார். AGA PSLF LMF அலை K. தனுசு (TVDG(E)) பொங்கல் பரிசுகளை வழங்கி விழாவைச் சிறப்பித்தார்.

விழாவில் குழந்தைகளுக்கான உறியடி, கரும்பு கடித்தல், தம்பதியர்களுக்கான "நீயா நானா" பாணி விவாதங்கள், "30 நொடிப் புகழ்" போன்ற கலகலப்பான போட்டிகள் நடைபெற்றன. காலை 08:30 மணிக்குள் வந்தவர்களுக்கு குலுக்கல் முறையில் ₹1000 மதிப்புள்ள புடவைகள் வழங்கப்பட்டன. மதிய உணவாக சைவ – அசைவஅறுசுவைவிருந்து அலை புருஷோத்தமன், அலை ஆனந்த்குமார்,அலை சுரேஷ்குமார்,அலைராஜா,அலை பரசுராம், சாசன தலைவர் அலை இராஜசேகர் மற்றும் சங்க நிர்வாகிகள் ஏற்பாட்டில் சிறப்பாக வழங்கப்பட்டது.

நிகழ்வின் இறுதியில் 2026–27 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் அறிமுகம் செய்யப்பட்டனர். விழாவின் அனைத்து ஏற்பாடுகளையும் TYSDS நிருவன் மற்றும் சாசனத் தலைவர்அலை Dr. M. ராஜசேகர், அவர்கள் ஒருங்கிணைத்தார். சாசன செயலாளர்அலை வெங்கடேஷன் அவர்கள் தலைமையில் அலை ஆனந்தகுமார் & அலை சுரேஷ் குமார் மற்றும் சங்க நிர்வாகிகள் ஒருங்கிணைந்து சிறப்பாக நடத்தினர்.

# அரசு மருத்துவமனைகளில் பொதுமக்களின் பாதுகாப்பை அடியோடு பறித்துள்ளது திமுக அரசு நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜன.13

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் ரவுடி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு உள்ள லட்சணத்தை அடிக்கோடிட்டு காட்டுகிறது. ஏற்கனவே, எலிகள், நாய்களை உலவ விட்டு, பொதுமக்களின் உயிரைப் பறிக்கும் நோய்களின் கூடாரமாக மாற்றி



அரசு மருத்துவமனைகளைச் சீரழித்தது போதாதென்று, தற்போது ரவுடிகளுக்கு இடையிலான சண்டைக்களமாக மாற்றி, அரசு மருத்துவமனைகளில் பொதுமக்களின் பாதுகாப்பை அடியோடு பறித்துள்ளது திமுக அரசு.

இது ஒருபுறமிருக்க பள்ளியில் கொலை, நீதிமன்ற வாயிலில் கொலை, காவல் நிலையத்தில் பெட்ரோல் குண்டு வீச்சு என அரசு நிறுவனங்கள் அத்தனையிலும் தனது துருப்பிடித்த இரும்புக் கரத்தினால் மக்கள் பாதுகாப்பை சிதைத்துள்ளது திமுக அரசு. காலங்கள் மாறும்போது காட்சிகளும் மாறுவது போல திமுக அரசால் உருவான கொலையுதிர் காலத்திற்குத் தேர்தல்காலத்தில் முற்றுப்புள்ளி வைப்பர் தமிழக மக்கள்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பொங்கலையொட்டி பன்மடங்கு உயர்ந்த ஆம்னி பேருந்துகளின் கட்டணம் டிடிவி தினகரன் கண்டனம்

சென்னை ஜன.13

ஆண்டுதவறாமல் தொடரும் ஆம்னி பேருந்துகளின் கட்டணக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த தவறிய போக்குவரத்துத்துறையின் மெத்தனப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது என்று அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளைக் கொண்டாட சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களில் வசிக்கும் பலர் அவரவர் சொந்த ஊர்களுக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் நிலையில், பன்மடங்கு அதிகரித்திருக்கும் ஆம்னி பேருந்துகளின் கட்டணம் பொதுமக்கள் மற்றும் பயணிகளிடையே மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



சென்னையிலிருந்து மதுரைக்கு இயக்கப்படும் ஆம்னி பேருந்துகளுக்கான கட்டணம் 700 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், கோவைக்கு இயக்கப்படும் பேருந்துகளுக்கான கட்டணம் 1,000 ரூபாயிலிருந்து 3,500 ரூபாயாகவும், நெல்லைக்கு இயக்கப்படும் பேருந்துகளுக்கான கட்டணம் 1,400 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாகவும் உயர்ந்திருப்பதாகப் புகார் எழுந்துள்ளது.

பொங்கல் திருநாள் மட்டுமல்ல ஒவ்வொரு பண்டிகை காலங்களிலும் திட்டமிட்டு பன்மடங்கு உயர்த்தப்படும் ஆம்னி பேருந்துகளின் கட்டணத்தைக் கண்டுகொள்ளாத போக்குவரத்துத் துறையால், சொந்த ஊர்களுக்குச் செல்லும் பயணிகள் மிகுந்தசிரமத்திற்குள்ளாகி வருவதோடு, சிலர் தங்களின் பயணங்களை ரத்து செய்யும் சூழலுக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, தன்னிச்சையாகக் கட்டணத்தை உயர்த்தி வசூல் வேட்டையில் இறங்கியிருக்கும் ஆம்னி பேருந்துகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, இனி வரும் நாட்களில் இதுபோன்ற கட்டணக் கொள்ளை நடைபெறாத வண்ணம் கண்காணிப்பு நடவடிக்கையையும் தீவிரப்படுத்த வேண்டும் என போக்குவரத்துத்துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# நாம் அனைவரும் யாராலும் பிரிக்க முடியாத தமிழின சொந்தங்கள்: மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜன.13

சென்னையில் நடைபெற்ற அயலகத் தமிழர் தின விழாவில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

உலகின் பல்வேறு நாடுகளில் தமிழர்களாகிய நீங்களும், உங்கள் குடும்பத்தார்களும் பல்வேறு முக்கிய பொறுப்புகளில்இருப்பதைநினைத்து நான் பெருமைப்படுகிறேன். நாம் அனைவரும், யாராலும் பிரிக்க முடியாத தமிழ் சொந்தங்கள், தமிழினச் சொந்தங்கள். இது பல்லாயிரமாண்டுகால சொந்தம், இன்னும் பல பல ஆண்டுகள் தொடரக்கூடிய சொந்தம்.



நாடுகளும், கடல்களும் நம்மை பிரித்தாலும், மொழியும் இனமும் நம்மை உணர்வால் இணைக்கிறது. தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு நன்மை செய்வது போலவே, அயல் நாட்டு தமிழர்களிடமும் சகோதர உணர்வுடன் தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. அதன் எடுத்துக்காட்டாக, அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஓய்வில்லாமல் உழைத்து வருகிறது.

மொழி சிதைந்தால் இனம் சிதையும்; இனம் சிதைந்தால் பண்பாடு சிதையும். பண்பாடு சிதைந்தால் அடையாளம் போய்விடும். அடையாளம் போய்விட்டால் தமிழர்கள் எனச் சொல்லும் தகுதியை இழந்துவிடுவோம். 4,000 ஆண்டு கால வரலாறு நம்முடையது என்பது கீழடி அகழாய்வால் உறுதியாகியுள்ளது. இது ஒரு கட்சியின் அரசல்ல; ஒரு இனத்தின் அரசு.

திராவிட மாடல் ஆட்சியில் அயலகத் தமிழர் நல வாரியம் அமைக்கப்பட்டு,

ஜன.12ஐ அயலகத் தமிழர் நாளாக கொண்டாடி வருகிறோம். "தமிழால் இணைவோம்; உலகெங்கும் தமிழ்; தமிழ் வெல்லும்" என்ற கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. தமிழ் வேர்களைத் தேடி பயணம் மூலமாக அயலகத் தமிழர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்து வருகிறோம்.

திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு தமிழ்நாட்டில் 105 முகாம்களின் வாழும் இலங்கை தமிழர்களுக்காக 7,469 வீடுகள் கட்டித்தர திட்டமிடப்பட்டு, படிப்படியாக செயல்படுத்தி வருகிறோம். வெளிநாடு வாழ் தமிழர்களுக்காக கட்டணமில்லா உதவி மையம் தொடங்கப்பட்டிருக்கிறது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் உக்ரைன், கம்போடியா, தாய்லாந்து, மியான்மர், இஸ்ரேல் போன்ற நாடுகளில் இருந்து 2,300க்கும் மேற்பட்ட தமிழர்களை மீட்டு கொண்டு வந்திருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அரசு மருத்துவமனையில் கூட பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லை அண்ணாமலை கடும் தாக்கு

சென்னை, ஜன.13

சென்னைகீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆதி என்ற இளைஞர் கூலிப்படையினரால் கொடூரமான முறையில் சரமாரியாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்த காவல்துறை, சூர்யா மற்றும் அவர் நண்பர்களான அலிபாய், கார்த்திக் ஆகிய மூன்று பேர் சேர்ந்து இந்தக் கொலையை செய்ததாக உறுதிப்படுத்தியிருக்கிறது. அரசு மருத்துவமனையில் உள்ளே புகுந்து செய்யப்பட்ட இந்த கொலை சம்பவம் தமிழகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.



இந்தநிலையில், திமுக ஆட்சியில் அரசு மருத்துவமனைகளில் கூட பொதுமக்களுக்கு பாதுகாப்பு இல்லை என தமிழக பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது:

சென்னையின் முக்கிய அரசு மருத்துவமனையான, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை வளாகத்திலேயே, பல்வேறு குற்ற வழக்குகள் கொண்ட ஆதி என்ற நபர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். தலைநகரில்,அரசு மருத்துவமனை வளாகத்தில் நடந்துள்ள இந்தப் படுகொலை, திமுக ஆட்சியில் காவல்துறை முழுமையாக செயலிழந்துவிட்டதை நிரூபிக்கிறது.

தலைநகரின் மையப்பகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில் கொலை நடக்கிறது என்பது, காவல்துறையின் தோல்வி மட்டும் அல்ல. திமுக அரசின் நிர்வாகத் தோல்வி. கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழகத்தில் கொலை நடைபெறாத நாட்களை, விரல் விட்டு எண்ணி விடலாம். எதிர்க்கட்சியினரைப் பழி வாங்க மட்டுமே காவல்துறையைப் பயன்படுத்தி, தமிழகக் காவல்துறையை முற்றிலுமாக முடக்கி வைத்திருப்பதுதான் திமுக அரசின் ஒரே சாதனை.

வயது முதிர்ந்தவர்கள், பெண்கள், குழந்தைகள், மாணவ மாணவியர், இளைஞர்கள் என, யாருமே திமுக ஆட்சியில் பாதுகாப்பாக உணரவில்லை. அரசு மருத்துவமனையில் கூட பாதுகாப்பு வழங்க முடியாத இந்த திமுக ஆட்சியில், பொதுமக்கள் எங்கே பாதுகாப்பாக இருப்பது?

துண்டுச்சீட்டில் யாரோ எழுதிக் கொடுப்பதை, திமுக அரசின் சாதனை என்றுமேடையில்வாசிப்பது மட்டும்தான் முதல் அமைச்சரின் பணி என்று நினைத்துக் கொண்டிருக்கிறார் மு.க.ஸ்டாலின். மாநில அரசின் முதல் பணியானசட்டம், ஒழுங்கைக் காப்பாற்றத் தெரியாமல், மேடைகளில் ஏறிப் பொய் சொல்ல அசிங்கமாகஇல்லையா? என அதில் பதிவிட்டுள்ளார்.

# கரூர் தோட்டக்குறிச்சி மலையம்மன் கோவிலில் அம்மனுக்கு பாலாபிஷேகம்

கரூர் ஜன.13

கரூர் மாவட்டம் தோட்டக்குறிச்சியில் உள்ள மலையம்மன் கோவிலில் அம்மனுக்கு பாலாபிஷேகம் நடைபெற்றது. பாலாபிஷேகத்தை முன்னிட்டு சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் காவிரி ஆற்றுக்கு சென்று புனித நீராடி தீர்த்தக் குடங்களுடன் மேளதாளங்கள் முழங்க ஊர்வலமாக கோவிலை வந்தடைந்தனர்.



அதனைத் தொடர்ந்து ஏராளமான பெண்கள் ஊர்வலமாக கொண்டு வந்த பால் குடங்களில் இருந்த பாலால் அம்மனுக்கு அபிஷேகம் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து பல்வேறு வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகமும், பல்வேறு மலர்களால் அலங்காரமும் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து தீபாராதனை காட்டப்பட்டது.

இதில் தோட்டக்குறிச்சி, தளவாபாளையம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு மலையம்மனை தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# 'ஆட்சியில் பங்கு': அமைச்சர் ஐ.பெரியசாமியின் கருத்துக்கு செல்வப்பெருந்தகை பதிலடி



சென்னை, ஜன.13

திமுக கூட்டணியில் காங்கிரஸ் இருந்து வருகிறது. சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில், ஆட்சியில் பங்கு என்ற தனது நிலைப்பாட்டை காங்கிரஸ் தொடர்ந்து தெரிவித்து வருகிறது. ஆனால் கூட்டணி ஆட்சி கிடையாது என்பதில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதியாக இருப்பதாக திமுகவின் மூத்த அமைச்சர் ஐ.பெரியசாமி நேற்று கூறி இருந்தார்.

இந்த நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை சென்னையில் இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது கூட்டணி ஆட்சி குறித்து ஐ.பெரியசாமி பேசியது தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளித்து செல்வப்பெருந்தகை பேசியதாவது;

"எல்லோருக்கும் ஒவ்வொரு கருத்து உண்டு. நாங்கள்எங்களதுகருத்தை சொல்லி இருக்கிறோம். ஆட்சியில் பங்கு இல்லை என்பதுஐ.பெரியசாமியின் தனிப்பட்ட கருத்து. ஆட்சியில் பங்கு குறித்து முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் மற்றும் காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல்காந்தி சேர்ந்து முடிவு எடுப்பார்கள்." என்றார்.

அப்போது 'தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி எப்போது?' என செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர் இதற்கு பதிலளித்த செல்வப்பெருந்தகை, 'தமிழகத்தில் இப்போது நடப்பதும்காங்கிரஸ்ஆட்சிதான்' என்று கூறியுள்ளார். செல்வப்பெருந்தகையின் இன்றைய பேட்டி, அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ளது.

# மணிமுத்தாறு அருவியில் குறையாத வெள்ளப் பெருக்கு: இரண்டாவது நாளாக குளிக்கத் தடை



நெல்லை, ஜன.13

மன்னார் வளைகுடா பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக தமிழகத்தில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது. அதன்படி நெல்லை, தென்காசி, தேனி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் நேற்று முன் தினம் இரவு முழுவதும் தொடர் மழை பெய்தது. குறிப்பாக நெல்லையில் இரவு முழுவதும் மிதமான மழை பெய்தது.

இதன் காரணமாக, மணிமுத்தாறு அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறையினர் நேற்று தடை விதித்திருந்தனர். இந்த நிலையில், மணிமுத்தாறு அருவியில் இன்றும் வெள்ளப்பெருக்கு குறையாத நிலையில் இரண்டாவது நாளாக அருவியில் குளிப்பதற்கு தடை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதனால், காலையில், மணிமுத்தாரு அருவிக்கு குளிக்க வந்திருந்த சுற்றுலா பயணிகள் மற்றும் அய்யப்ப பக்தர்கள், இந்த அறிவிப்பால் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர். நீர்வரத்தை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# பொங்கல் பரிசு வாங்க சென்ற மூதாட்டி மயங்கி விழுந்து பலி

கோவை, ஜன.14

பொங்கல் பண்டிகை வருகிற 15ம் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி தமிழக அரசு சார்பில் ரூ.3,000 ரொக்கப் பணத்துடன் பொங்கல் பரிசு தொகுப்பு தமிழகம் முழுவதும்வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், கோவை மாவட்டம் பேரூர் அருகே உள்ள வேடபட்டி சத்யா நகரைச் சேர்ந்தவர் வீரம்மாள் (வயது 87). இவரது கணவர் உயிரிழந்து விட்டார். இதனால் அவர் கஸ்தூரிநாயக்கன் பாளையத்தில் உள்ள வீட்டில் தங்கியிருந்து வேலை செய்து வந்தார்.

பொங்கல் பரிசு தொகுப்பு வாங்குவதற்காக வீரம்மாள் ஆட்டோ மூலம் நாகராஜபுரம் பஸ் நிறுத்தம் பகுதிக்கு வந்தார். அங்கிருந்து ரேஷன் கடைக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். திடீரென அவர் சாலையோரத்தில் மயங்கி விழுந்தார். உடனே அக்கம்பக்கத்தினர்அவரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து தொண்டாமுத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# போராட்டத்தில் ஈடுபட்ட பகுதிநேர ஆசிரியர்கள் 262 பேர் மீது வழக்குப்பதிவு



சென்னை, ஜன.13

ஊதிய உயர்வு, பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை நுங்கம்பாக்கம், டி.பி.ஐ. வளாகம் அருகில் பகுதி நேர ஆசிரியர்கள் நேற்று 4வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த ஆசிரியர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினார்கள்.

நேற்றைய போராட்டத்தில் பகுதி நேர ஆசிரியர்கள், குடுகுடுப்பைக்காரர் மற்றும் பூம்பூம் மாடு போல வேடமிட்டு, 'குடுகுடுப்பை அடித்தவாறு 'முதல் அமைச்சர் காதில் கேட்டுவிட்டது, பொங்கலுக்குள் அரசாணை வழங்கிவிடுவார். பெயரிலேயே பொய் சொல்லாத அமைச்சர்பொய்யாமொழி பொய் சொல்லாமல் பணி நிரந்தரம் வாங்கி கொடுத்துவிடுவார்' என்று தெரிவித்தனர்.

மேலும், இறுதிச்சடங்கு செய்வதுபோல வேடமிட்டு பாடை கட்டி அதில் 181 என்ற தேர்தல் வாக்குறுதியை எழுதி வைத்து 'இறுதி சடங்கு செய்யவே பணமில்லை, செத்தும் கடனாளியாக செல்லும் நிலைமை ஏற்படுவதாகவும், உடனடியாக வாக்குறுதி 181ஐ நிறைவேற்றவும்' என்றவாறு ஒப்பாரி வைத்து நூதன முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒப்பாரி போராட்டத்தில் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.

இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்து பஸ்சில் ஏற்றினார்கள். அப்போது, போராட்டகாரர்களுக்கும் போலீசாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. கைது செய்யப்பட்ட ஆசிரியர்கள் கோயம்போடு, சைதாப்பேட்டை உள்பட சில பகுதிகளில் உள்ள திருமண மண்டபங்களில் தங்கவைக்கப்பட்டு, பின்னர் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட பகுதிநேர ஆசிரியர்கள் 262 பேர் மீது நுங்கம்பாக்கம் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அனுமதியின்றி கூட்டம் சேர்த்தல், அமைதிக்கு குந்தகம் விளைவித்தல் உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# விஜய் கைகாட்டுபவர்களே எம்.எல்.ஏ.க்கள் செங்கோட்டையன் பேட்டி



த.வெ.க. தலைவர் விஜய் யாரை கைகாட்டுகிறாரோ, அவர்கள் தான் அந்த 3 தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் என்றார்.

கோத்தகிரி, ஜன.13

நீலகிரி மாவட்டத்தில் வாழ்ந்து வரும் படுகர் இன மக்களின் குல தெய்வமான ஹெத்தையம்மன் திருவிழா கடந்த ஒரு வாரமாக நடைபெற்று வருகிறது. அவர்கள், கோத்தகிரி அருகே உள்ள பேரகணி கிராமத்தில் உள்ள ஹெத்தையம்மன் கோவிலுக்கு பாரம்பரிய உடையணிந்து சென்று காணிக்கை செலுத்தி வழிபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் நேற்று தமிழக வெற்றிக் கழக நிர்வாகக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளரும், ஈரோடு, கோவை, திருப்பூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களின் அமைப்பு செயலாளருமான செங்கோட்டையன் பேரகணி ஹெத்தையம்மன் கோவிலுக்கு கட்சியினருடன் சென்று காணிக்கை செலுத்தி வழிபட்டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறும் போது, நீலகிரி மாவட்டத்தில் படுகர் இன மக்களின் முக்கிய நிகழ்வான ஹெத்தையம்மன் திருவிழாவில் பங்கேற்று வழிபடுவதற்காக இங்கு வந்தேன். நீலகிரியில் 3 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. வருகிற சட்டமன்ற தேர்தலில் த.வெ.க. தலைவர் விஜய் யாரை கைகாட்டுகிறாரோ, அவர்கள் தான் அந்த 3 தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் என்றார்.

# அதிமுக வேட்பாளர் நேர்காணல்: நடிகை கவுதமி வருகை



சென்னை, ஜன.13

தமிழகத்தில் சட்டசபைத் தேர்தல் ஏப்ரல் மாதம் நடைபெற வாய்ப்பு உள்ளது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் தேர்தல் நடவடிக்கைகளை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தி வருகின்றன. அதிமுக கூட்டணியில் பாஜக, பாமக ஆகிய கட்சிகள் இணைந்துள்ளன. மேலும், சில கட்சிகள் இணையும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறி வருகிறார்.

இந்த நிலையில், தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கும் விருப்ப மனு வாங்கும் பணி அதிமுகவில் கடந்த டிசம்பர் 15ந் தேதி தொடங்கியது. 31ந் தேதி வரை விருப்ப மனுக்கள் பெறப்பட்டதில், மொத்தம் 10 ஆயிரத்து 175 பேர் விண்ணப்பித்து இருந்தனர். அதில், 2187 மனுக்கள் எடப்பாடி பழனிசாமி தங்கள் தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று விருப்பம் தெரிவிக்கப்பட்டிருந்தது. 7,988 பேர் தாங்கள் போட்டியிட விருப்பம் தெரிவித்து மனு அளித்திருந்தனர்.

இந்த நிலையில், அதிமுகவில் வேட்பாளர் நேர்காணல் கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது. ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நேர்காணல் நடைபெறுகிறது. முதல்நாளில் சேலம் மாநகர், புறநகர், ஈரோடு மாநகர், புறநகர் கிழக்கு, புறநகர் மேற்கு, கரூர், திண்டுக்கல் கிழக்கு, மேற்கு, நாமக்கல், திருப்பூர் மாநகர், புறநகர் கிழக்கு, புறநகர் மேற்கு, கோவை மாநகர், புறநகர் வடக்கு, புறநகர் தெற்கு, நீலகிரி ஆகிய கட்சி ரீதியான மாவட்டங்களுக்கு உள்பட்ட சட்டசபை தொகுதிகளில் போட்டியிட விருப்ப மனு கொடுத்தவர்களிடம் எடப்பாடி பழனிசாமி நேர்காணல் நடத்தினார்.

இந்நிலையில், அதிமுக வேட்பாளர் நேர்காணலில் பங்கேற்க நடிகையும், கட்சி நிர்வாகியுமான நடிகை கவுதமி ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்துள்ளார். விருதுநகர், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருச்சி புறநகர் வடக்கு மாவட்டங்களில் விருப்ப மனு அளித்தவர்களிடம் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று நேர்காணல் நடத்துகிறார்.

# மின்னணு வாக்கு எந்திரத்தை ஒழிக்க வேண்டும்: நடிகர் மன்சூர் அலிகான் பேச்சு



சென்னை, ஜன.13

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் பெயரை மத்திய அரசு மாற்றியுள்ளதை கண்டித்து சென்னையில் நடந்த காங்கிரஸ் உண்ணாவிரத போராட்டத்தில், நடிகர் மன்சூர் அலிகான் பேசியதாவது:

ஆட்டோவில் மீட்டருக்கு சூடு வைப்பது போல், பா.ஜனதாவினர் மின்னணு வாக்கு எந்திரத்திற்கு சூடு வைத்து ஆட்சிக்கு வந்துள்ளனர். எனவே, முதலில் மின்னணு வாக்கு எந்திரத்தை ஒழிக்க வேண்டும். ராகுல் காந்தியை இளம் தலைவர் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் அவருக்கு வயதாகிக் கொண்டே போகிறது. எனவே அவரை சீக்கிரம் பிரதமர் பதவியில் அமர வைக்க வேண்டும்.

நடிகர் விஜய் மட்டும் தான் தனி விமானத்தில் செல்ல வேண்டுமா? ஏன் நாம் செல்லக்கூடாதா? நான்கைந்து தனி விமானம் புக் செய்து நாமும் டெல்லி சென்று போராடுவோம். பிரதமர் மோடி வேறு நாட்டிற்கு தப்பி ஓடி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். 2029 வரை அவர்களை ஆட்சி செய்ய விடக்கூடாது. அதற்கான புரட்சி இதோ ராஜரத்தினம் மைதானத்தில் இருந்து கிளம்புது. மகாத்மா காந்தி பெயரை தொடுவதற்கு என்றுமே அவர்கள் பயப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

# பாலமேடு, அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு போட்டிக்கான ஏற்பாடுகள் விறுவிறுப்பு



மதுரை, ஜன.13

ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பாலமேடு, அலங்காநல்லூரில் உலகப் புகழ் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையையொட்டி, பாலமேட்டில் வருகிற 16ந் தேதியும், அலங்காநல்லூரில் 17ந் தேதியும் ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ளது.

இதற்காக பாலமேட்டில் உள்ள மஞ்ச மலை சுவாமி ஆற்று திடலில் தயார்நிலையில் வாடிவாசல், பார்வையாளர் மாடம் மற்றும் இரண்டு அடுக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பல்வேறு பாதுகாப்பு முன்னேற்பாடு பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. இதே போல் அலங்காநல்லூரிலும் ஜல்லிக்கட்டு போட்டியை முன்னிட்டு முன்னேற்பாடு பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. அதன்படி கோட்டை முனி சாமி திடல், வாடிவாசல், பார்வையாளர்கள் அமரும் இரும்பு தடுப்பு மேடை, வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அமரும் இடம் மற்றும் இரண்டு அடுக்கு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த பணிகள் அனைத்தும் முழுவீச்சில் நடந்து வருகிறது. பாலமேட்டில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியில் தமிழக துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினும் கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைக்கிறார்கள். இதை முன்னிட்டு போலீசாரும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைதீவிரமாக செய்து வருகின்றனர்

# லெபனானில் ஹிஸ்புல்லா ஆயுத கிடங்கு மீது இஸ்ரேல் தாக்குதல்



தெஹ்ரான், ஜன.13

ஈரான் நாட்டில் அதிகரித்துள்ள பணவீக்கம், அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்கநிலை உள்ளிட்டவற்றால் விரக்தி அடைந்துள்ள மக்கள் அரசுக்கு எதிராக தெருக்களில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28ந்தேதி தொடங்கிய மக்களின் போராட்டம், ஈரானின் 31 மாகாணங்களில்100நகரங்களில் 15 நாட்களாக நீடித்து வருகிறது. ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பாதுகாப்பு படையினரைஅரசுஇறக்கி விட்டு உள்ளது. இதன்படி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

வன்முறையை தடுக்கும் நோக்கில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவையை அரசு முடக்கி வைத்து உள்ளது. சில அரசு ஊடகங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில், ஈரானில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 420 பேர் வரை பலியாகி இருக்க கூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று அதிர்ச்சி தகவலை தெரிவித்து உள்ளது. அவர்களில் 8 குழந்தைகளும் அடங்குவார்கள். போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 2,600 பேர் அரசால் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இந்த சூழலில், ஈரானின் அட்டார்னி ஜெனரல் முகமது மோவாஹிதி ஆசாத் அரசு தொலைக்காட்சியில் வெளியிட்டு உள்ள அறிக்கையில், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள், கலக்காரர்களுக்கு உதவுபவர்கள் அல்லது வன்முறையில் பொருட்களை சூறையாடுபவர்கள் மற்றும் பாதுகாப்பின்மையை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான, விரைவான, சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

அந்த குற்றவாளிகள் அனைவருக்கும் ஒரேவித தண்டனைதான் கிடைக்கும். அவர்களுக்கு எந்த வித கருணையும் காட்ட கூடாது என வழக்கறிஞர்களுக்கும் அறிவுறுத்தி உள்ளார்.

ஈரானின் பதற்ற நிலைக்கு உலக நாடுகளின் தலைவர்கள் வருத்தம் தெரிவித்து உள்ளனர். இந்நிலையில், வாடிகன் சிட்டியில் போப் லியோ இறைவணக்கநிகழ்ச்சிக்கு பின்னர் கூடியிருந்த கூட்டத்தினரின் முன் பேசும் போது, ஈரான் மற்றும் சிரியா போன்ற மத்திய கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியான பதற்ற நிலையால், மக்கள் பலர் பலியாகி வருகின்றனர்.

அவர்களுடன் என்னுடைய எண்ணங்கள் உள்ளன. ஒட்டுமொத்த சமூகத்தின் நலனுக்காக பேச்சுவார்த்தை நடைபெறும் என நம்புகிறேன். அதற்காக வேண்டி கொள்கிறேன் என்றார்.

இதேபோன்று, பின்லாந்து ஜனாதிபதி அலெக்சாண்டர் ஸ்டப் கூறும் போது, வன்முறையை தவிர்க்க வேண்டும் என ஈரானிய அதிகாரிகளை வலியுறுத்தினார். அயர்லாந்து, இஸ்ரேல் நாடுகளின் வெளியுறவு துறை மந்திரிகளும் ஈரான் சூழல் பற்றி வருத்தம் தெரிவித்து உள்ளனர்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

13.01.2026

# பொங்கல் பண்டிகை: ஆம்னி பஸ்கள் அதிக கட்டணம் வசூலித்தால் புகார் அளிக்க உதவி எண்கள் அறிவிப்பு



சென்னை ஜன.13

பொங்கல் பண்டிகை, தொடர்விடுமுறையையொட்டி சென்னைஉள்படபல் வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு புறப்பட்டு வருகின்றனர். அதேவேளை, பொங்கல் பண்டிகை, தொடர் விடுமுறையை பயன்படுத்தி தனியார் ஆம்னி பஸ்கள் கட்டண கொள்ளையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், ஆம்னி பஸ்களில் அதிக கட்டணம் வசூலிப்பது தொடர்பாக பொதுமக்கள் புகார் அளிக்க உதவி எண்களை போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் வெளியிட்ட அறிக்கையில்,

பொங்கல் பண்டிகை மற்றும் தொடர் வார விடுமுறையை முன்னிட்டு (12.01.2026 முதல் 18.01.2026 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பஸ்கள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் அதனைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் வட்டாரப்போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச்சாவடி ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு சிறப்புக்குழு அமைக்கப்பட்டு அதிகப்படியான கட்டணம் வசூல் செய்யும் மற்றும் அனுமதிக்குப்புறம்பாக இயங்கும் ஆம்னி பஸ்களை தீவிரமாக சோதனை செய்து அபராதம் விதித்தும், வாகனங்களை சிறைபிடித்தும் வரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் அதிக அளவில் தங்களது சொந்த ஊருக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதால் ஆம்னி பஸ்களில் அதிக கட்டணம் வசூலிப்பதாக புகார் வருவதை தொடர்ந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொதுமக்கள் கீழ்காணும் எண்கள் மூலம் தொலைப்பேசி வாயிலாகவோ, வாட்ஸ் ஆப் மூலம் குறுஞ்செய்தி அல்லது குரல் பதிவாகவோ புகார் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வ.எண் ஆணையரகம் தொலைபேசி எண்கள்

1 போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம், சென்னை 1800 425 6151

2 இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (வடக்கு) 99442 53404

3 இணைப்போக்குவரத்து ஆணையரகம், சென்னை (தெற்கு) 97905 50052

4 இணைப்போக்குவரத்து ஆணையரகம், மதுரை 90953 66394

5 இணைப்போக்குவரத்து ஆணையரகம், கோயம்புத்தூர் 91235 93971

6 துணைப்போக்குவரத்து ஆணையரகம், விழுப்புரம் 96773 98825

7 துணைப்போக்குவரத்து ஆணையரகம், வேலூர் 98400 23011

8 துணைப்போக்குவரத்து ஆணையரகம், சேலம் 78456 36423

9 துணைப்போக்குவரத்து ஆணையரகம், ஈரோடு 80569 40040

10 துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருச்சிராப்பள்ளி 90660 32343

11 துணைப்போக்குவரத்து ஆணையரகம், விருதுநகர் 90257 23800

12 துணைப்போக்குவரத்து ஆணையரகம், திருநெல்வேலி 96981 18011

13 துணைப்போக்குவரத்து ஆணையரகம், தஞ்சாவூர் 95850 20865

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரப்பலாறு அணையில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறப்பு



திண்டுக்கல் ஜன.13

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே வடகாடு மேற்குத்தொடர்ச்சி மலையையொட்டி பரப்பலாறு அணை உள்ளது. இந்த அணையின் மொத்த நீர் மட்டம்90அடியாகும். இந்நிலையில், பாசனவசதிக்காக பரப்பலாறு அணையில் இருந்து நாளை முதல் தண்ணீர் திறக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நீர்வளத்துறை செயலாளர் வெளியிட்ட அறிக்கையில்,

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், பரப்பலாறு அணையிலிருந்து, பெருமாள்குளம், முத்து பூபாலசமுத்திரம் கண்மாய், சடையகுளம், செங்குளம், இராமசமுத்திரக்கண்மாய் மற்றும் ஜவ்வாதுப்பட்டி பெரியகுளம் ஆகியவற்றின் கீழ் பாசனம் பெறும் பழைய பாசன நிலங்களில், நிலையிலுள்ள பயிர்களை காப்பாற்றும் பொருட்டு 13.01.2026 முதல் 23.01.2026 வரை 51.30 மில்லியன் கன அடிக்கு மிகாமல் (நீரிழப்பு உட்பட) தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டத்திற்குட்பட்ட தாசாரிபட்டி, விருப்பாட்சி, தங்கச்சியம்மாபட்டி, வக்கம்பட்டி, வெரியப்பூர் மற்றும் ஜவ்வாதுப்பட்டி ஆகிய கிராமங்களிலுள்ள 1323.00 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV தேர்வில் தேர்ச்சி பெற்று, விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தேர்வு செய்யப்பட்ட 5தேர்வாளர்களுக்கு பணிநியமன ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்

# இன்றைய ராசி பலன்கள் (13.01.2026)

**மேஷம்** வேலையில் புதிய பொறுப்புகள் வரும். பொறுமையுடன் செயல்பட்டால் முன்னேற்றம் கிடைக்கும். செலவுகளில் கவனம் தேவை.

**ரிஷபம்** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். பணவரவு திருப்தி தரும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

**மிதுனம்** பேச்சுத் திறன் மூலம் சாதகமான முடிவுகள் கிடைக்கும். மாணவர்களுக்கு நல்ல நாள். தேவையற்ற விவாதங்களை தவிர்க்கவும்.

**கடகம்** மனஅமைதி முக்கியம். வேலைகளில் சற்று தாமதம் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**சிம்மம்** தன்னம்பிக்கை உயரும் நாள். மேலதிகாரிகளிடம் பாராட்டு கிடைக்கும். புதிய முயற்சிகள் வெற்றி தரும்.

**கன்னி** பணவிஷயங்களில் திட்டமிட்டு நடக்க வேண்டும். குடும்ப உறுப்பினர்களுடன்நல்லபுரிதல் ஏற்படும்.

**துலாம்** செய்யும் செயல்களில் வெற்றி கிடைக்கும். திருமணம் தொடர்பான விஷயங்களில் நல்ல செய்தி வரும்.

**விருச்சிகம்** உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.மறைமுகஎதிரிகளை கவனிக்கவும். மன அழுத்தம் குறையும்.

**தனுசு** பயணம்தொடர்பானவாய்ப்புகள் வரும். கல்வி, போட்டித் தேர்வுகளில் முன்னேற்றம் காணப்படும்.

**மகரம்** வேலைப்பளு அதிகரிக்கும். பொறுப்புணர்ச்சியுடன் செயல்பட்டால் உயர்வு கிடைக்கும்.

**கும்பம்** புதிய யோசனைகள் வெற்றி தரும். நண்பர்கள் மூலம் லாபம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும். குடும்ப ஆதரவு கிடைக்கும். செலவுகளை கட்டுப்படுத்தவும்.

# சட்டமன்ற தேர்தலில் பாமக சார்பில் போட்டியிட விருப்ப மனு பெறுவதற்கான காலம் நீட்டிப்பு ராமதாஸ் அறிவிப்பு



சென்னை ஜன.13

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நடைபெறவுள்ள 2026 சட்டமன்ற பொதுத்தேர்தலில் பாமக சார்பில் போட்டியிட விரும்புவோர் விருப்ப மனுக்கள் பெறுவதற்கான காலம் மேலும் இரண்டு நாட்களுக்கு நீட்டிக்கப்படுவதாக பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நடைபெறவுள்ள 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் சட்டமன்ற வேட்பாளராக போட்டியிட விரும்புவோரது விருப்ப மனுக்கள் பெறப்பட்டு வருகிறது.

பாட்டாளி மக்கள் கட்சியின் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளின் வேண்டுகோளை ஏற்று நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிட விரும்பும் விருப்ப மனுவை பெறுவதற்கான தேதி 13.1.2026 செவ்வாய்கிழமை மற்றும் 14.1.2026 புதன்கிழமை ஆகிய இருநாட்களுக்கு நீட்டிக்கப்படுகிறது. இவ்வாறுஅதில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2 நாட்களில் ரூ 51 கோடி வசூலித்த "பராசக்தி "



'பராசக்தி' திரைப்படம் முதல் நாளில் ரூ. 51 கோடி வசூல் செய்துள்ளதாக படத் தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி' திரைப்படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடந்த 10ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா, சேத்தன் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இந்தப் படத்துக்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தை டான் பிக்சர்ஸ் சார்பில் ஆகாஷ் பாஸ்கரன் தயாரித்துள்ளார்.

இந்தி மொழித் திணிப்பின்போது தமிழகத்தில் நடைபெற்ற மாணவர்களின் எழுச்சியைப் பேசும் படமாக 'பராசக்தி' திரைக்கு வந்துள்ளது. சென்சாரில் இந்தப் படத்தில் 25க்கும் மேற்பட்ட இடங்களில் மாற்றம் செய்யப்பட்டது.

இந்நிலையில், 'பராசக்தி' திரைப்படம் 2 நாட்களில் ரூ. 51 கோடி வசூல் செய்துள்ளதாக படத் தயாரிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.

# "ஜன நாயகன்" விவகாரம் சென்சார் போர்டு தரப்பில் கேவியட் மனு தாக்கல்



நடிகர் விஜய், நடிகைகள் பூஜா ஹெக்டே, மமிதா பைஜூ உள்ளிட்டோர் நடித்துள்ள 'ஜனநாயகன்' படத்துக்கு தணிக்கை சான்றிதழ் வழங்க மறுத்து, அந்த படத்தை மறுஆய்வு குழுவுக்கு தணிக்கை வாரியம் கடந்த 5ந் தேதி பரிந்துரை செய்தது. இதை எதிர்த்து சென்னைஐகோர்ட்டில், அந்த படத்தைதயாரித்துள்ள கே.வி.என்.புரோடக்ஷன் நிறுவனம் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கை கடந்த 6 மற்றும் 7ந்தேதி விசாரித்த நீதிபதி பி.டி.ஆஷாகடந்த 9 ஆம் தேதி தீர்ப்பளித்தார். அதில், 'ஜனநாயகன்' படத்தை மறுஆய்வு குழுவுக்கு பரிந்துரை செய்த தணிக்கை வாரிய தலைவரின் உத்தரவை ரத்து செய்கிறேன். இந்த படத்துக்குதணிக்கை சான்றிதழை உடனடியாக வழங்கவேண்டும்" என்று உத்தரவிட்டார். இந்த உத்தரவு பிறப்பித்த அடுத்த சில நிமிடங்களில், தணிக்கை வாரியம் ஐகோர்ட்டில் மேல் முறையீடு செய்தது. இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, தனி நீதிபதி உத்தரவுக்கு தடை விதித்தது. இதனால் படம் வெளியாவதில் சிக்கல் ஏற்பட்டதால், ஜனநாயகன் படத்தின் ரிலீஸ் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வழக்கின் அடுத்த கட்ட விசாரணையை வரும் 20ம் தேதிக்கு ஐகோர்ட்டு ஒத்திவைத்துள்ள நிலையில், சுப்ரீம் கோர்ட்டில் பட தயாரிப்பு நிறுவனம் தரப்பில் மேல் முறையிடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு இன்று விசாரணைக்கு பட்டியலிடப்படாத நிலையில், விரைவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், தணிக்கை வாரியம் சுப்ரீம் கோர்ட்டில் கேவியட் மனு தாக்கல் செய்துள்ளது. தங்கள் தரப்பு வாதத்தை கேட்காமல் 'ஜனநாயகன்' பட வழக்கில் உத்தரவு பிறப்பிக்க கூடாது என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "பராசக்தி" படத்தின் படப்பிடிப்பு புகைப்படங்களை பகிர்ந்த அதர்வா

சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்துள்ள 'பராசக்தி' திரைப்படம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நேற்று திரையரங்குகளில் வெளியானது. ரவி மோகன், அதர்வா, ஸ்ரீலீலா, சேத்தன் உள்ளிட்ட பலர் நடித்துள்ள இந்தப் படத்துக்கு ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தை டான் பிக்சர்ஸ் சார்பில் ஆகாஷ் பாஸ்கரன் தயாரித்துள்ளார்.

இந்தி மொழித் திணிப்பின்போது தமிழகத்தில் நடைபெற்ற மாணவர்களின் எழுச்சியைப் பேசும் படமாக 'பராசக்தி' திரைக்கு வந்துள்ளது. சென்சாரில் இந்தப் படத்தில் 25க்கும் மேற்பட்ட இடங்களில் மாற்றம் செய்யப்பட்டது. 'பராசக்தி' திரைப்படம் முதல் நாளில் ரூ. 27 கோடி வசூல் செய்துள்ளதாக படத் தயாரிப்பு நிறுவனம் அறிவித்திருந்தது. இந்நிலையில், 'பராசக்தி' திரைப்படத்தில் சின்னதுரை கதாபாத்திரத்தில் நடித்த புகைப்படங்களை நடிகர் அதர்வா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

# தேசிய சீனியர் கூடைப்பந்து இறுதிப் போட்டி: தமிழக அணியை வீழ்த்தி இந்தியன் ரெயில்வே 'சாம்பியன்'



தமிழ்நாடு கூடைப்பந்து சங்கம் சார்பில் 75வது தேசிய சீனியர் கூடைப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடந்து வந்தது. இதில் ஆண்கள்பிரிவில் நடந்த இறுதிப் போட்டி நடப்பு சாம்பியன் தமிழ்நாடு அணி, இந்தியன் ரெயில்வேயை எதிர்கொண்டது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் தமிழக அணி முதல் கால்பகுதியில் 1020 என்று பின்தங்கியது. அதில் இருந்து மீள தமிழக அணி கடுமையாக முயற்சித்த போதிலும் கடைசி வரை ரெயில்வேயின் ஸ்கோரை எட்ட முடியவில்லை. முடிவில் தமிழக அணி 6977 என்ற புள்ளி கணக்கில் தோல்வியை தழுவியது. தமிழக வீரர் அரவிந்த் குமார் 29 புள்ளி எடுத்தும் பலன் இல்லை. சாம்பியன் பட்டத்தை கைப்பற்றிய இந்தியன் ரெயில்வே அணிக்கு ரூ.5 லட்சம் பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது. 2வது இடத்தை பிடித்த தமிழகத்துக்கு ரூ.3 லட்சம் கிடைத்தது.

பெண்கள் பிரிவின் இறுதி ஆட்டத்திலும் நடப்பு சாம்பியனான இந்தியன் ரெயில்வே அணி பட்டத்தை தட்டிச் சென்றது. இதன் இறுதி ஆட்டத்தில் ரெயில்வே அணி 7566 என்ற புள்ளி கணக்கில் கேரளாவை சாய்த்தது. புஷ்பா, ஹர்ஷிதா 22 மற்றும் 23 புள்ளிகள் வீதம் எடுத்து ரெயில்வே அணியின் வெற்றியில் முக்கிய பங்கு வகித்தனர்.

முன்னதாக நடந்த 3வது இடத்துக்கான ஆட்டத்தில் தமிழக பெண்கள் அணி 7649 என்ற புள்ளி கணக்கில் மத்திய பிரதேசத்தை தோற்கடித்து வெண்கலப்பதக்கத்தை வசப்படுத்தியது.

தொடரின் மதிப்புமிக்க வீரர், வீராங்கனையாக குர்பாஸ் சிங்கும், புஷ்பாவும் (இருவரும் ரெயில்வே அணி) தேர்வு செய்யப்பட்டனர். பரிசுகளை இந்திய கூடைப்பந்து சங்க தலைவர் ஆதவ் அர்ஜூனா வழங்கினார்.

# நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து வாஷிங்டன் சுந்தர் விலகல்.!

நியூசிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒருநாள் போட்டிகளில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. 2வது ஒருநாள் போட்டி நாளை மறுநாள் நடைபெற உள்ளது.

இந்த தொடரில் இந்திய அணியில் நட்சத்திர ஆல்ரவுண்டரும், தமிழகத்தை சேர்ந்தவருமான வாஷிங்டன் சுந்தர் இடம் பெற்று இருந்தார். இந்த நிலையில், இடுப்பு வலி காரணமாக நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து வாஷிங்டன் சுந்தர் விலகியுள்ளார். வாஷிங்டன் சுந்தர் விலகியது இந்திய அணிக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே திலக் வர்மா மற்றும் ரிஷப் பண்ட் ஆகியோர் காயம் காரணமாக நடப்பு தொடரில் இருந்து விலகியது குறிப்பிடத்தக்கது.

# அது எனக்கு பிடிக்கவில்லை..தோனிக்கும் இதே மாதிரி நடந்துள்ளது: விராட் கோலி

இந்தியாவுக்கு வந்துள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 ஒரு நாள் மற்றும் ஐந்து 20 ஓவர் போட்டிகளில் ஆடுகிறது. இதன்படி, இந்தியா–நியூசிலாந்து இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள கோடாம்பி ஸ்டேடியத்தில் நேற்று பகல்–இரவு போட்டியாக நடைபெற்றது. விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் இந்திய அணி திரில் வெற்றியை ருசித்தது.

விராட் கோலி 93 ரன்களை விளாசி வெற்றிக்கு முக்கிய பங்காற்றினார். இந்தப் போட்டியில் நேற்று ஒரு சுவாரசிய நிகழ்வும் நடந்தது. இந்திய அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான ரோகித் அவுட் ஆனவுடன் ரசிகர்கள் ஆர்ப்பரித்தனர். விராட் கோலி மைதானத்திற்குள் வருவதை வரவேற்கும் விதமாக ரசிகர்கள் இவ்வாறு செய்தனர். இது குறித்து பரிசளிப்பு நிகழ்வின் போது வர்ணனையாளர்கள் விராட் கோலியிடம் கேட்டனர். இதற்கு பதிலளித்த விராட் கோலி, "ஒருவர் அவுட் ஆகி வெளியே செல்லும் போது, களத்திற்குள் வரும் எனக்கு அதிக ஆர்ப்பரிப்பு எழுவது எனக்கு பிடிக்கவில்லை. இதேபோல் தோனிக்கும் அடிக்கடி நடந்துள்ளது. ரசிகர்களின் உற்சாகத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அதே நேரத்தில், அவுட் ஆகி வெளியேறும் வீரர் இதை பெரிதாக விரும்ப மாட்டார் என நினைக்கிறேன். நான் என் விளையாட்டில் தான் முழு கவனத்தையும் செலுத்துகிறேன். எனக்கு இப்படியான வரவேற்பு அளிப்பதற்காக ரசிகர்களுக்கு நான் நன்றிக்கடன் பட்டவனாக உணர்கிறேன்" என்றார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V. CELL: 9443699066